செ.வெ.எண்.11 நாள்.07.01.2020

**பத்திரிகை செய்தி**

**கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் சம்பா பருவ வரத்து குறித்து விவசாயிகள், வியாபாரிகளுடனான ஒருங்கிணைப்பு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன்,இஆப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

-----------

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் வேளாண்மை அறிவியல் நிலைய கூட்டரங்கில் சம்பா பருவ வரத்து குறித்து விவசாயிகள், வியாபாரிகளுடனான ஒருங்கிணைப்பு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன்,இஆப, அவர்கள் இன்று (07.01.2020) தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வெ.அன்புச்செல்வன்,இஆப, அவர்கள் தெரிவித்ததாவது.

கடலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு நல்ல அளவில் மழை பெய்துள்ளது. இதனை பயன்படுத்தி விவசாயிகள் விவசாயம் செய்து பயன்பெற வேண்டும். மாதந்தோறும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெறுகிறது. இந்த ஆண்டு சிறப்பான ஆண்டாக அமையும். எந்த பணியும் பாதிக்கப்படாத அளவிற்கு கடந்த 2019-20-ம் அண்டு உள்ளது. இந்த பருவத்தில் மக்காச்சோளம் மற்றும் மணிலா பயிரிடலாம். மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் விவசாயிகளுக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்டத்தில் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் விளைச்சல் உற்பத்தி போதுமான அளவாக உள்ளது. வியாபாரிகள், விவசாயிகள் எந்த இடர்பாடுமின்றி செயல்படவேண்டும். தங்களின் கோரிக்கைகள் அனைத்தும் முறையான தீர்வு காணப்படும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சார் ஆட்சியர் (விருத்தாச்சலம்) திரு.பிரவின்குமார்,இஆப., இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.முருகன், உதவி இயக்குநர் (வேளாண்மை) திரு.பூவராகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.மாரியப்பன், துணை இயக்குநர் (வேளாண் மற்றும் வணிகம்) திரு.ஜெயக்குமார் மற்றும் விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்